2. அறிக்கைகள் அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுவின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடு) இன்று நிறைய அலுவல்கள் இருக்கின்றன.* Please sit down. *(குறுக்கீடு) குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள். (குறுக்கீடு)* Please sit down, Doctor. *உங்களுக்கு மைக் கொடுக்கவில்லை. அதனால் நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது.*

***திரு. வி. சோமசுந்தரம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் நித்தம், நித்தம் வணங்கும் எங்கள் குலதெய்வம், கழக நிரந்தரப் பொதுச் செயலாளர், நல்லாட்சி புரிந்துகொண்டிருக்கும் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். என்னைப் பொது நிறுவனங்கள் குழுவினுடைய தலைவராக நியமித்த இதய தெய்வத்திற்குக் கோடானுகோடி நன்றியினைத் தங்களுடைய பொற்பாதங்களில் சமர்ப்பித்து வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011-2012 ஆம் ஆண்டிற்கான 1 முதல் 3 வரையிலான 3 அறிக்கைகளைப் பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *டாக்டர், நீங்கள் அவையின் நடவடிக்கைகளுக்கு தயவுசெய்து குந்தகம் விளைவிக்காதீர்கள்.* Please sit down. No, I am not allowing.

முற்பகல் 10—45

3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்கள் (திருத்தம் மற்றும் நீக்கம்) சட்டமுன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்கள் (திருத்தம் மற்றும் நீக்கம்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள்*

பேசுவதற்கு நான் mike கொடுக்கவில்லை. நீங்கள் பேசுவது அவைக் குறிப்பில் ஏறாது. தயவுசெய்து உட்காருங்கள். நேற்று உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்துவிட்டேன், பேசினீர்கள். Please sit down. நேற்றே இதுகுறித்து விவாதிக்கப்பட்டது.

(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளியேறினார்.)

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்கள் (திருத்தம் மற்றும் நீக்கம்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

4. விதி 110–ன்கீழ் அறிக்கை

நாகப்பட்டினத்தில் மீன் வளப் பல்கலைக்கழகம் நிறுவுதல் குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு*